Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 220

செவ்வாய்க்கிழமை 04 ஜூலை 2023

ஆனி 19 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



# சஜித்துக்கு ரணில் மீண்டும் அழைப்பு

கொழும்பு, ஜூலை 4

போலியான தர்க்கங்களை முன்வைத்து தோல்வியைத் தழுவிக் கொள்வதற்கு மாறாக நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிர்க்கட்சியினர் அனைவருக்கும் நேற்று அழைப்பு விடுத்துள்ளார். »11

## மதில் வீழ்ந்து குழந்தை சாவு!

யாழ்., ஜூலை 4

இரண்டரை அடி உயரமான மதில் வீழ்ந்ததில் ஒரு வருடமும் 9 மாதங்களும் நிரம்பிய குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. பூநகரியைச் சேர்ந்த இமானுவேல் தர்சன் சாதுசன் »11

## வங்கிகள் இன்று திறப்பு

கொழும்பு, ஜூலை 4

ஐந்து நாள் விடுமுறைக்குப் பின்னர் வங்கிகள் மற்றும் பங்குச்சந்தை என்பன இன்று திறக்கப்படவுள்ளன. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்காக கடந்த வியாழன் முதல் நேற்று திங்கட்கிழமை வரை வங்கிகள் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ.இ)

## தமிழ் எம்.பி.க்களுடன் விரைவில் பேச்சு!

### சந்தேகம் வேண்டாம் என்கிறார் ரணில்

யாழ்ப்பாணம், ஜூலை 4

அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் முன்னெடுத்துள்ள பேச்சின் அடுத்த சுற்று விரைவில் நடைபெறும் »11

## லிட்ரோ எரிவாயு ரூ.3 ஆயிரத்துக்குள்

கொழும்பு, ஜூலை 4

லிட்ரோ சமையல் எரிவாயு விலைத் திருத்தம் இன்று நள்ளிரவு மேற்கொள்ளப்படவுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். இதன்படி, 12.5 கிலோ எடை »11

## கட்டுக்கரைக்குளத்தில் மீனவர்கள் சடலமாக மீட்பு!

மன்னார், ஜூலை 4

மன்னார் - கட்டுக்கரைக்குளத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை படகில் மீன் பிடிக்கச் சென்று காணாமற்போன 2 மீனவர்களும் நேற்றுத் திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளனர். பரப்பாங்கண்டலைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான விசுவா (வயது-57) மற்றும் பரப்பாங்கண்டலைச் சேர்ந்த சந்திரகுமார் »11



## முல்லைத்தீவில் முகாமிட்டுள்ள பௌத்த கடும்போக்குவாதிகள்

முல்லைத்தீவு, ஜூலை 4

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பௌத்த - சிங்கள கடும்போக்குவாதிகள் படையெடுத்துள்ளனர். அவர்கள் அந்த மாவட்டத்தில் தங்கியுள்ள சிங்கள மக்களைச் சந்தித்துள்ளதுடன் »11

## இளைஞனின் சடலம் மீட்பு!

யாழ்., ஜூலை 4

இருபாலை கிழக்கிலுள்ள வீடொன்றிலிருந்து இளைஞனின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது. அவர் தவறான முடிவு »11



## தையிட்டி விகாரைக்கு எதிரான 4 ஆம் கட்டப் போராட்டம் நிறைவு

### பொலிஸார் - போராட்டக்காரர்கள் நேற்று கடும் வாக்குவாதம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

தையிட்டியில் தனியார் காணியை ஆக்கிரமித்து இராணுவத்தால் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்றுமாறு கோரியும், அதனைச் சுற்றியுள்ள தனியார் காணிகளை உடனடியாக உரியவர்களிடம் »11

## வெடுக்குநாறிமலை விக்கிரகம் உடைப்பு; இந்து - பௌத்த சங்கத்துக்குத் தொடர்பு

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

வவுனியா, ஜூலை 4

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமைக்கும் இந்து - பௌத்த சங்கத்துக்கும் நேரடித் தொடர்பு இருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பகிரங்கக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொருளாதாரம் மேம்பட்டவுடன் ராஜபக்சக்கள் ஆட்சியமைப்பர்

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

**பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு காண்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தைத் தோற்றுவித்தோம். தேர்தல் ஊடாக ராஜபக்சக்கள் தலைமையிலான அரசாங்கத்தை வெகு விரைவில் தோற்றுவிப்போம் - இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச.**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டு மக்கள் மத்தியில் ராஜபக்சக்கள் தொடர்பில் நல்லதொரு நிலைப்பாடு காணப்படுகிறது. 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஒரு மாற்றம் வேண்டும் என்பதற்காகவே மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைந்த அரசாங்கத்தையே மஹிந்த ராஜபக்ச 'மைத்திரி - ரணில்' அரசாங்கத்திடம் ஒப்படைத்தார்.

'மைத்திரி - ரணில்' அரசாங்கம் நாட்டை முன்னேற்றுவது தொடர்பாக அவதானம் செலுத்தாது ராஜபக்சக்களைப் பழிவாங்குவது தொடர்பாக அவதானம் செலுத்தியது.

ராஜபக்சக்கள் மீது போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் சுமத்தப்பட்ட எந்தக் குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லை.

2019ஆம் ஆண்டு பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது.

ஒரு தரப்பினரது தவறான ஆலோசனைகளால் அரசாங்கம் குறுகிய காலத்துக்குள் பலவீனமடைந்தது. பொருளாதாரப் பாதிப்பு அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்தது.

பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு காண்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தைத் தோற்றுவித்தோம்.

அரசியல் ரீதியில் பொதுஜன பெரமுன எடுத்த தீர்மானம் சரியானது என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் கட்சி என்ற ரீதியில் சிறந்த முறையில் போட்டியிடுவோம். தேர்தல் ஊடாக ராஜபக்சக்கள் தலைமையிலான அரசாங்கத்தை வெகுவிரைவில் தோற்றுவிப்போம் - என்றார். (எ-இ)

## இயலுமெனில் சவேந்திர சில்வா நீதிமன்றத்துக்குச் செல்லட்டும்!

### விமல் வீரவன்ஸ சவால்

'அரகலய' போராட்டம் தொடர்பிலும், அமெரிக்கா தொடர்பிலும் நான் குறிப்பிட்ட கருத்துக்கு எதிராகச் சவேந்திர சில்வா நீதிமன்றம் சென்றால் அவரது புத்தகத்தில் இல்லாத பல விடயங்களை ஆதாரத்துடன் நீதிமன்றத்தில் வெளிப்படுத்துவேன். முடிந்தால் அவர் வழக்குத் தாக்கல் செய்யட்டும் - இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

69 இலட்ச மக்களாணையை முன்னிலைப்படுத்தி செயற்படுகிறோம் என குறிப்பிடும் தகைமை பொதுஜன பெரமுனவுக்குக் கிடையாது. பொதுஜன பெரமுன நாட்டு மக்களுக்கு வழங்கிய ஆணையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மலினப்படுத்தியுள்ளார். தாம் அரசியல் செய்வதற்கான சூழலை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்தார் என பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குறிப்பிடுவது முட்டாள்தனமானது. பொதுஜன பெரமுனவின் அரசியல் செயற்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பலவீனப்படுத்தினார். மக்களின் தன்னிச்சையான போராட்டத்தை அவர் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். பொதுஜன பெரமுனவின் எதிர்கால நிலைமை கவலைக்குரியது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கையை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு என்ற பெயரில் நாட்டுக்குத் எதிரான செயற்பாடுகளை அவர் முன்னெடுத்துள்ளார்.

'அரகலய' (போராட்டம்) அமெரிக்காவுக்கு இடையிலான தொடர்பு குறித்து நான் வெளியிட்ட ஒன்பதில் மறைந்த கதை புத்தகத்தால் தனக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா எனக்கு அறிவித்துள்ளார்.

காலிமுகத்திடல் களத்தை அடியொற்றி செய்த 'டீல்' நடவடிக்கைகளை ஆதாரபூர்வமாக என்னால் வெளிப்படுத்த முடியும். புத்தகத்தில் இல்லாத பல விடயங்களை ஆதாரபூர்வமாக நீதிமன்றத்தில் வெளிப்படுத்துவேன். முடிந்தால் சவேந்திர சில்வா வழக்குத் தாக்கல் செய்யட்டும் - என்றார். (எ-இ)

## கசிப்புக் காய்ச்சியவர் பொலிஸாரால் கைது!

**யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்றுக் கசிப்புக் காய்ச்சியவர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுத் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.** யாழ்ப்பாணம் ரயில் நிலையப் பகுதியைச் சேர்ந்த 28 வயதான நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவரிடம் இருந்து 30 லீற்றர் கோடாவும் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-26-20)

## செவ்வாய்க்கிரகத்துக்கும் இலங்கைக்கும் தொடர்பு

செவ்வாய்க் கிரகத்திலுள்ள கற்பாறைகள் மண் உள்ளிட்ட கூறுகளுக்கும் இலங்கையில் உள்ள கற்பாறைகள் மற்றும் மண் உள்ளிட்ட கூறுகளுக்கும் இடையில் தொடர்பிருப்பதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் ஆய்வு நடத்துவதற்காக நாசாவின் ஆய்வாளர்கள் குழுவொன்று இலங்கைக்கு வருகைதந்துள்ளது. நாசாவில் மூத்த விஞ்ஞானியாகக் கடமையாற்றும் இலங்கைப் பிரஜையான சுனிதி கருணாதிலக தலைமையிலான நிபுணர்கள் குழுவினரே ஆய்வுக்காக இலங்கைக்கு வந்துள்ளனர். அவர்கள் முதலில் இலங்கையின் கினிகல்பலஸ்ஸ பிரதேசத்தில் கண்காணிப்புச் சுற்றுலாவில் இணைந்து பின்னர் இந்திகொலபலஸ்ஸ மற்றும் உஸ்ஸங்கொட பகுதிகளுக்குச் செல்லவுள்ளனர். (ம)

## யாழ்ப்பாணம் - கொழும்பு விமானசேவை ஆரம்பம்!

கடந்த சில காலங்களாகத் தடைப்பட்டிருந்த யாழ்ப்பாணம் - கொழும்பு விமான சேவை கடந்த சனிக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விமான சேவைக்கான ஒருவழிப் பயணக்கட்டணமாக 22 ஆயிரம் ரூபாவும் இருவழிப் பயணக்கட்டணமாக 45 ஆயிரம் ரூபாவும் அறவிடப்பட்டு வருகிறது.

செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் விமானசேவை நடைபெற்று வருவதாக இரத்மலானை விமான நிலைய முகாமையாளர் அநுர ராஜபக்ச தெரிவித்துள்ளார். பயணிகள் தம்முடன் 7 கிலோ பொதியை எடுத்துச் செல்லமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-6)

## கல்வியுரிமையை வலியுறுத்தி குருநகரில் நேற்றுப் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 4

மாணவர்களின் கல்வியுரிமையை வலியுறுத்தியும், போதைப்பொருள் கலாசாரம் நீக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தும் யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குருநகர் தொடர்மாடியில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி குருநகர் அரச மருத்துவமனைக்கு முன்பாக நிறைவடைந்தது. (ம-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையர்கள் என்ற ஒற்றுமை இங்கில்லை!

## புத்திஜீவிகளிடத்தில் மைத்திரி தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூலை 4**

**இந்தியா பல இன, மொழி, மத மக்கள் வாழும் நாடாக உள்ள நிலையில், இந்தியர்கள் என்ற ரீதியில் அனைவரும் ஒன்றுபடுவதைப் போல, இலங்கையிலும் இலங்கையர் என்ற ரீதியில் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
30 வருட கால யுத்தம் வடக்கையும் தெற்கையும் பிரித்தது. யுத்தம் நிறைவடைந்து பத்து வருடங்கள் கடந்துள்ள போதிலும், இன்னமும் எமக்குள் 'இலங்கையர்கள்' என்ற ஒற்றுமை ஏற்படவில்லை. இந்தியாவில் பல மொழிகள், இனங்கள் உள்ளன. பல்லினக் கலாசாரத்துக்கு உரித்தானவர்கள் அவர்கள். இந்தியர்கள் என்ற ஒற்றுமை அவர்களிடத்தில் உள்ளது. ஆனால், இலங்கையில் அந்த ஒற்றுமை இல்லை. கடந்த கால கசப்பான அனுபவங்கள், ஆட்சியாளர்களின் கடும்போக்கு சிந்தனைகள் எம்மை ஒற்றுமைப்படுத்தலில் இருந்து விலக்கி வைத்துள்ளன - என்றார். (ம-27)



# மன்னார் விபத்து: மூவருக்குக் காயம்;

மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில், மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வாரன விக்டர் சோசை அடிகளார் உட்பட மூவர் காயமடைந்தனர்.
மடுத் திருத்தலத்தின் ஆடி மாத திருவிழாவில் கலந்துகொண்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. சாரதியின் கட்டுப்பாட்டை வாகனம் இழந்தமையே விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (ம-ரி2-213)

# வெடிமருந்து மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ்ப்பாணம் பாஷையூர்ப் பகுதியில் பாழடைந்த வீடொன்றில் இருந்து பெருமளவு வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.
இராணுவத்தினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது வீடு ஒன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 20 ஜெலட்டின் குச்சிகள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட பொருள்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-20)

# தாத்தாவும் பேரனும் சடலங்களாக மீட்பு!

புத்தளம் நுரைச்சோலை இலந்தையடி கடற்கரையில் குளிக்கச் சென்ற இருவர் நேற்றுமுன்தினம் இரவு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். தாத்தாவும் பேரனுமான மதுரங்குளி ஹிதாயத் நகரைச் சேர்ந்த கச்சு முஹம்மது சஹீத் (வயது - 60) மற்றும் அஜ்வாத் சஹீர்கான் (வயது - 22) ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள் ளனர்.
கச்சு முஹம்மது சஹீத் தனது இரு பேரன்களுடன் குளிப்பதற்காகச் சென்றுள்ளார். இதன்போது இளைஞர்கள் நீரில் மூழ்கியதை அவதானித்து அவர்களில் ஒருவரைக் காப்பாற்றிவிட்டு, மற்றையவரைக் காப்பாற்றுவதற்காகச் சென்றபோதே அவரும் மற்றைய பேரனும் நீரில் மூழ்கி இறந்துள்ளனர். (ம-இ)

# ஆர்னோல்ட்டுக்குத் தடை!

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ்ப்பாணம் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் இம்மானுவேல் ஆர்னோல்ட் மற்றும் செயலாளர் அஜித்குமார் ஆகியோர் அந்தப் பதவிகளில் செயலாற்ற இடைக்காலத் தடை விதித்து யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் கட்டாணை வழங்கியுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் நிர்வாக உறுப்பினரான பல்கலைக்கழக உடற்கல்வித்துறை விரிவுரையாளர் மாணிக்கவாசகர் இளம்பிறை தாக்கல் செய்த வழக்கிலேயே இந்தக் கட்டாணை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றினால் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டது.
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் யாப்பின்படி தலைவர் மற்றும் செயலாளர் இரண்டு தடவைகளுக்கு மேல் அந்தப் பதவியில் நீடிக்கமுடியாது என்றும் யாப்புக்குப் புறம்பாக பதவிகளைப் பிடித்திருக்கும் ஆர்னோல்ட், அஜித்குமார் ஆகியோரை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் மற்றும் செயலாளர் பதவிகளிலிருந்து நீக்கி கட்டளையிடுமாறும் வழக்காளி கோரியிருந்தார். (ம-125)




விலக்குப்பிடிக்கப் போனால் விளக்குமாத்து அடிவாங்கவும் ரெடியா இருக்கோணும். கம்பஸில முகாமைத்துவபீடப் பெடியளுக்கிடையில சண்டையொண்டு நடந்து. அதில கொம்பேறிமூக்கன் மாதிரி வலியச் சண்டைக்குப் போனவைக்கு வகுப்புத்தடை போட்டிருக்கு. அந்தத் தடையில இரு நியாயமிருக்கு. ஆனால் ரண்டு பகுதியும் அடிபடேக்கை, இடைக்குள்ள புகுந்து அவையை சண்டைபிடிக்க வேண்டாமெண்டு சமாதானப் புறாவா விலக்குத் தீர்க்கப்போன, மனேஜ்மெண்ட் மாணவர் ஒன்றியத் தலைவருக்கும் சேர்த்து இந்த வகுப்புத்தடை போட்டதுதான் அநியாயம்.
கிட்டத்தட்ட நாலுவருசமா நடக்காமல் இருந்த 'மாக்கோஸ்' வாரத்தை இந்தமுறை நடத்தவேணும் எண்டு, ஓடுப்பட்டுத் திரிஞ்சு பெர்மிசன் எல்லாம் எடுத்ததில இந்த மனேஜ்மெண்ட் மாணவர் ஒன்றியத் தலைவரும் முன்னுக்கு நிண்டவர். இப்பிடிக் கஷ்டப்பட்டு, [illegible] நாளைக்குப் பிறகு நடக்கிற நிகழ்வை, இரண்டு தரப்பின்ர சண்டையால குழம்பவிடக்கூடாது எண்டுதான், அந்த மாணவர் ஒன்றியத் தலைவர், தனக்கு அடி விழுந்தாலும் பரவாயில்லை எண்டு நடுவுக்க புகுந்து சண்டையை நிப்பாட்ட வெளிக்கிட்டவர். ஆனால், இப்ப விலக்குப் பிடிச்ச குற்றத்துக்காக வகுப்புத்தடை. இப்பிடி சண்டையை நிப்பாட்டப் போனாலும் வகுப்புத்தடை எண்டால், ஆரும் அடிபட்டுச் செத்தாலும் அதை மறிக்கப் போகமாட்டினமே. அதைத்தான் கம்பஸ் நிர்வாகம் விரும்புதோ? ஆயிரம் குற்றவாளியள் தப்பினாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது எண்டதுதான் சட்டத்தின்ர அடிப்படை விதி. ஆனால் இஞ்ச எல்லாம் தலைகீழாவெல்லோ நடக்குது.

★ ★ ★

இதுவும் கம்பஸ் விசயம் தான். அண்டைக்கு அங்க உள்ள டொக்டரை ஏத்தி இறக்கிற வேலைக்கு மட்டும் தான் அம்புலன்ஸைப் பாவிக்கினமெண்டு பட்சி சொன்னதெல்லோ. அந்த விசயத்தை 'ஓடிட்' செய்ய வந்தவையும் கண்டுபிடிச்சு. 'இதால வீண் செலவு. இதை நிப்பாட்டிற வழியைப் பாருங்கோ' எண்டு அட்வைஸ் பண்ணினவையாம். இந்த விசயம் துணைவேந்தரின்ர காதுக்கும் போக, 'இனி டொக்டருக்கு ஓட்டோவில போய் வாற ஏற்பாட்டைச் செய்யுங்கோ' எண்டு அவர் சொல்லியிருக்கிறார். ஆனால் அதை நடைமுறைப்படுத்த நந்திமாதிரி குறுக்க பாய்ஞ்சு தடை போட்டிருக்கிறார் கம்பஸ் பதிவாளர். 'அப்பிடி ஓட்டோவில ஒரு டொக்டரை ஏத்தி இறக்கினால் கம்பஸின்ர கௌரவம் போடும்' எண்டு ஏதேதோ சாட்டுச் சொல்லியிருக்கிறார். அதாலதான் இன்னும் அந்த டொக்டர் அம்புலன்ஸில தெம்போட போய்வாறாராம். கௌரவம், கௌரவம் எண்டு கடைசியா கம்பஸின்ர மானத்தை உவையள் கப்பலில ஏத்திப்போட்டுத்தான் ஓய்வினம் போல.



\- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துராஜாவுக்கு தாய்லாந்தில் உற்சாகமான வரவேற்பு!



**கொழும்பு, ஜூலை 4**

**தாய்லாந்திலிருந்து நன்கொடையாக இலங்கைக்கு வழங்கப்பட்ட 'முத்துராஜா' என்ற ழைக்கப்படும் 'சக்சுரீன்' என்ற யானை நேற்று முன்தினம் காலை மீண்டும் தாய்லாந்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.**

முத்துராஜாவை ஏற்றிச்செல்லும் விமானம் நேற்றுமுன்தினம் காலை 7.30 மணியளவில் கட்டுநாயக்க விமானநிலையத்தினூடாக தாய்லாந்தை நோக்கிப் புறப்பட்டது. 5 மணிநேரப் பயணத்தின் பின்னர் அந்த யானை தாய்லாந்தை அடைந்தது.

இந்தப் பயணத்துக்காக தாய்லாந்திலிருந்து விலங்கு மருத்துவர்கள் மூவர், யானைப்பாகன் ஒருவர் மற்றும் உதவியாளர் ஒருவரும் வந்திருந்தனர். இந்த விமான பயணத்துக்காகத் தயாரிக்கப்பட்ட விசேட கூண்டுக்குப் பழக்கப்படுத்துவதற்காக முத்துராஜாவுக்கு ஒரு மாதகாலப் பயிற்சி வழங்கப்பட்டது. அதன் பின்னரே அந்த யானை தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளது. தாய்லாந்தில் சக்சுரீனுக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

2001ஆம் ஆண்டு சக்சுரீன் என்ற யானை தாய்லாந்து அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது.

யானையின் உடல் நலம் நாளுக்கு நாள் பலவீனமடைந்து வந்தமையின் காரணமாக, அதனை மீண்டும் தாய்லாந்து அரசு இலங்கையிடமிருந்து மீளப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)



## கூட்டுறவை வலியுறுத்திய சைக்கிள் பயணம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம் ஓய்வுநிலை கூட்டுறவுப் பரிசோதகரான வை.கயிலைநாதன் இலங்கை முழுவதுக்குமான மிதிவண்டிப் பயணத்தை, அளவெட்டி மல்லாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை ஆரம்பித்தார்.

இந்தநிகழ்வில் சங்கத்தின் தலைவர், பொதுமுகாமையாளர், பணியாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கூட்டுறவுப் பரிசோதகர்கள், கூட்டுறவாளர்கள், நலன் விரும்பிகள், தொல்புரம் சர்வோதய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ம-ரி2,63)

## பளுதூக்கல் போட்டியில் தேசியத்தில் பதக்கங்கள்





யாழ்ப்பாணம், ஜூலை 4

கேகாலை பிலிமத்தலாவை மத்திய கல்லூரியில், கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தேசியமட்ட பளுதூக்கல் போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு இரண்டு பதக்கங்கள் கிடைத்தன.

வி.ஜெஸ்மினா 18 வயதின் 71 கிலோ எடைப்பிரிவில் 92 கிலோகிராம் பளுவைத்தூக்கி தங்கப்பதக்கத்தையும், இ.றம்மியா 20 வயதின் 55 கிலோ எடைப்பிரிவில் 65 கிலோகிராம் பளுவைத் தூக்கி வெள்ளிப்பதக்கத்தையும் கைப்பற்றினார்கள். (ம-ரி3,27)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் சப்பறத்திருவிழா, தேர்த் திருவிழா, தீர்த்தோற்சவம் என்பன அண்மையில் இடம்பெற்றன. (ச)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**மிதுனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். எந்தக் காரியத்திலும் பொறுமை அவசியம். மற்றவர்களுடன் வாக்கு வாதத்தில் ஈடுபடவேண்டாம். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும் போது சற்று கவனமாக இருக்கவும்.

**சிம்மம்:** மனதில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும். கடன்களாலும் எதிரிகளாலும் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். குடும்ப விடயமாகசற்றுஅலைச்சலும்சோர்வும்ஏற்படும். தாய்மாமன் வழியில் சுபச்செய்தி வரும்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். சகோதர வகையில் மகிழ்ச்சியுடன் ஆதாயமும் உண்டாகும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். உறவிணர்கள் மூலம் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். இளைய சகோதர வகையில் ஆதாயம் ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.

**தனுசு:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். உறவிணர்கள் வகையில் எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கும்.

**மகரம்:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையான பணம் இருப்பினும் தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும்.

**கும்பம்:** தந்தை வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். சகோதர வகையில் எதிர்பாராத செலவு ஏற்படும். வாழ்க்கைத்துணையின் உடல்நலனில் கவனம் தேவை.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. தாய்வழி உறவினர்கள் வகையில் சுபச்செலவுகள் ஏற்படும்.

## வடக்கில் மழைக்கு வாய்ப்பு

வடக்கு மாகாணத்தில் இன்று அவ்வப்போது மழை பெய்வதற்கான சாத்தியங்கள் உள்ளன என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

நாட்டில் தென்மேற்குப் பகுதிகளில் நிலவும் மழையுடனான வானிலை தொடரும். மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும்.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பதிவாகக்கூடும். ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புதைகுழிகளா? போர்க்குற்றங்களா?

'**போ**ர் இடம்பெற்ற பகுதியில் மனிதப் புதைகுழிகள் இருக்கவேசெய்யும்' என்று வெகு இலகுவாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார் நீதி அமைச்சரான விஜயதாஸ ராஜபக்ச. முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் பகுதியில் அண்மையில் வெட்டப்பட்ட கிடங்கு ஒன்றுக்குள் இருந்து 'பச்சை நிற' ஆடைகளும், மனித எச்சங்களும் ஏராளமாக மீட்கப்பட்ட நிலையில், அந்தப் பகுதி மிகப்பெரும் மனிதப் புதைகுழி விவகாரமாக மாறியிருக்கிறது. நீதிமன்ற உத்தரவுக்கு அமைய ஜூலை ஆறாம் திகதி, அகழ்வின் பின்னர் இந்த மனிதப்புதைகுழி தொடர்பான அடுத்தகட்ட மர்மங்கள் – தகவல்கள் வெளிவரும் என்று கருதப்படும் நிலையிலேயே நீதியமைச்சர் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இறுதிப்போர் தொடர்பான விடயங்கள் எப்போதெல்லாம் வெளிச்சத்துக்கு வருகின்றனவோ – எப்போதெல்லாம் இந்த விடயங்கள் பேசுபொருள் ஆகின்றனவோ அப்போதெல்லாம், ஒருவித மெத்தனப்போக்கையே அரசாங்கம் கைக்கொண்டுவருகின்றது. அதன் தொடர்ச்சியாகத்தான் நீதி அமைச்சர் விஜயதாஸவின் கருத்து அமைந்திருக்கின்றதே அன்றி, இதில் ஆச்சரியப்படுவதற்கோ – விவாதிப்பதற்கோ – ஒன்றுமில்லை. விஜயதாஸ ராஜபக்ச, இவ்வாறான மெத்தனப்போக்கை வெளிப்படுத்தாமல் நின்று – நிதானமாகக் கருத்துத் தெரிவித்திருந்தால்தான் அது ஆச்சரியத்துக்கு உரித்தான விடயமாக அமைந்திருக்கும்.

இங்கே முரண்நகை என்னவென்றால் போர் இடம்பெற்ற பகுதிகளில் மனிதப்புதைகுழிகள் இருக்கவேண்டும் என்பது ஏதோ கட்டாய விதி போல , நீதி அமைச்சர் சொல்லியிருக்கின்றார். ஆனால் போரின் போது கடைப்பிடிக்கவேண்டிய விதிகளை பெரும்பாலான அரசபடைகள் மதிப்பதேயில்லை. அதனால், மனித உரிமை மீறல்களும், போர்க்குற்றங்களும் போர் நடக்குமிடங்களில் மலியத்தான் செய்கின்றன. அதன் உச்சமாகவே புதைகுழிகளும் உருவாகின்றன. தமது போர்க்குற்றங்களை மறைக்க, சித்திரவதைக்குட்பட்டவர்களைக் கொன்று, எவருக்கும் தெரியாத இடங்களில் புதைத்துவிட்டு அதிகாரத்தின் படைகள் நழுவிச் சென்றுவிடுகின்றன. படைகளுக்கு இடையிலான போரில் இந்தப் புதைகுழிகளுக்கு வாய்ப்பில்லை. எப்போது ஒரு படைத்தரப்பு தன் எதிரிப் படைத்தரப்பை மட்டுமல்லாது, மக்களையும் கொல்கிறதோ அப்போதுதான் புதைகுழிகள் பிறப்பெடுக்கின்றன. பின்னொரு காலத்தில், ஏதோஒருவகையில் அந்தப் புதைகுழிகள் வெளிப்பட்டு, தமக்கு நேர்ந்த அக்கிரமத்தை இந்த உலகுக்குச் சொல்லவும் செய்கின்றன. போர்க்குற்றங்களின் ஆதாரமாகவும் அவை மாறுகின்றன. இலங்கையின் செம்மணி முதல் குர்திஷ்தான், சிரியா, ஈராக் தற்போது உக்ரைன் – ரஷ்யா இடையில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போர்வரையில் இனங்காணப்பட்ட அத்தனை மனிதப் புதைகுழிகளும் அந்தந்தப் பகுதியில் இடம்பெற்ற போர்க்குற்றத்தையே பறைசாற்றின. இவ்வாறானதொரு பின்னணியில், கொக்குத்தொடுவாயில் இனங்காணப்பட்டிருக்கும் மனிதப் புதைகுழியும்கூட இலங்கை அரசாங்கத்தின் போர்க்குற்றத்தின் ஓர் எச்சமே என்ற நியாயமான சந்தேகம் எழவே செய்கின்றது.

இதேவேளை, இறுதிப்போரின் பின்னர் இலங்கையில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுவது இதுவொன்றும் முதல்முறையல்ல. இதற்கு முன்னரும் சூரியகந்த, வில்பிட்ட, நிகவரபிட்டிய, மிருசுவில், துரையப்பா விளையாட்டரங்கு, திருக்கேதீஸ்வரம் என்று பல பகுதிகளிலும் அவதானிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த மனிதப் புதைகுழிகள் அதிகாரக் கதிரைகளின் அழுத்தத்தால் மூடி மறைக்கப்பட்டனவே அன்றி நீதியானதும் நியாயமானதுமான விசாரணைகளை எதிர்கொள்ளவேயில்லை. இவ்வாறானதொரு நிலையில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திலும் நீதி கிட்டும் என்ற எதிர்பார்ப்புகள் தமிழர்களுக்கு இல்லவேயில்லை. ஆனால், மனிதப் புதைகுழி விவகாரத்தில் சர்வதேசம் தலையிடுவதற்கான ஓர் ஆரம்பப்புள்ளியாக இந்த விவகாரம் அமையவேண்டும் என்ற எதிர்பார்ப்பு தமிழர்களிடத்தில் மிகுந்திருக்கின்றது.

இறுதிப்போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறவேண்டும், மீண்டும் நிகழாமையை உறுதிப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தும் சர்வதேசம், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிகள் போன்ற பெரும் பிடிமானங்கள் கிட்டுகின்ற வேளையில் காக்கின்ற மௌனம்தான் இலங்கை அரசாங்கத்தின் மெத்தனத்துக்கு முழுக்காரணம் என்பதும் மறுக்கமுடியாத உண்மையே.

**நாளொரு நல்வார்த்தை**

"தான் துன்பத்தில் கிடந்தாலும் மற்றவருக்கு துன்பம் நினைக்காமல் வாழ்பவனே உயர்ந்த மனிதன்" — புத்தர்




மே 9 கலவரம்

## நீதி வழங்காமையையிட்டு அரசு வெட்கப்படுகின்றது!

பந்துல தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 4**

**மே 9 ஆம் திகதிச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்று அமைக்காமல் இருப்பதையிட்டு அரசாங்கம் என்ற ரீதியில் வெட்கமடைகிறோம் - இவ்வாறு போக்குவரத்து, ஊடகத்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
அரசியல் வாழ்க்கையில் பல சவால்களைக் கடந்துள்ளோம். கொரோனாப் பெருந்தொற்றுத் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்பு பெரும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியது. பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு காண்பதற்காக அரசியல் கொள்கைகளை புறக்கணித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தோம். நாடு என்ற ரீதியில் பெரும் சவால்களை வெற்றி கொண்டுள்ளோம். தேசிய கடன் மறுசீரமைப்பு சிறந்த ஆரம்பமாகும். தேசியக் கடன் மறுசீரமைப்பு எவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தாது. சர்வதேச நிதி மற்றும் நீதி நிறுவனங்களின் ஆலோசனைகளுடன் வெளிநாட்டு அரசமுறைக் கடன்களும் வெகுவிரைவில் மறுசீரமைக்கப்படும். பொருளாதாரம் ஸ்திரமடைந்ததன் பின்னர் அவரவர் தமக்கு ஏற்றாற்போல் அரசியல் செய்து கொள்ளலாம் - என்றார். (எ-இ)

## மெய்வல்லுநர் போட்டி

கொடிகாமம், ஜூலை 4
தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் வலயமட்ட மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று செவ்வாய்க் கிழமை பி.ப 1.30 மணிக்கு வரணி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணக் கல்வித் திணைக்கள உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜசீலன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-ரி3,159)


## மருத்துவ நிறுவனங்களை பதிவுசெய்யுமாறு உத்தரவு

கொழும்பு, ஜூலை 4
நாட்டிலுள்ள அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களையும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யுமாறு சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல்சபை அறிவித்துள்ளது.
2006ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களின் பதிவுச் சட்டத்தின் விதிகளின்படி, இலங்கையில் உள்ள அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களும் சுகாதார அமைச்சின் கீழ் உள்ள தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குமுறை சபையில் பதிவு செய்யப்படவேண்டும். பதிவு செய்யாத அனைத்துதனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிராகவும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல்சபை மேலும் தெரிவித்துள்ளது. (ம-இ)

**நாளை**
05.07.2023
புதன்கிழமை
ஆனி 20
சுபநேரம் : 04.27 – 05.57
ராகுகாலம் : 11.57 – 01.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# யாழ்ப்பாணம் மண்டைதீவு - சிறுப்புலம்
# அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோவில்
## நவகுண்ட பக்ஷ புனராவர்த்தன நூதனாலய அஷ்டபந்தன
# மஹா கும்பாபிஷேகம் - 2023

**கர்மாரம்பம்**
04.07.2023 செவ்வாய்க்கிழமை
காலை 9.15 – மு.ப.10.15 வரை

ஷண்முகர் துதி
மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்கள் போற்றி காஞ்சி
மாவடி வைக்கும் செவ்வேள் மலரடி போற்றி - அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி

**மஹா கும்பாபிஷேகம்**
07.07.2023 வெள்ளிக்கிழமை
காலை 8.55 – மு.ப.10.15 வரை

**எண்ணெய்க்காப்பு**
06.07.2023 வியாழக்கிழமை
காலை 9.30 – மாலை 5.30 வரை

முருகப்பெருமான் மெய்யடியார்களே!

சிவபூமி என்று திருமூலரால் புகழப்பட்டதும் குபேரபுரி என அழைக்கப்பட்டதுமான இலங்கைத் திருநாட்டின் வடக்கில் பயிர் விளைநிலங்களும், நீர் வளங்களும், வேத ஆகம அறிஞர்களும், கல்விமான்களும், கலைஞர்களும், பல்தொழில் நிபுணர்களும், கந்தபுராணக் கலாசார விழுமியங்களும், இயற்கை அழகும் நிறைந்த யாழ்ப்பாணம், மண்டைதீவு, சிறுப்புலம் என்னும் கிராமத்தில் சித்தர்களால் வழிபடப்பெற்றதும் பல ஆலயங்களுக்கு நடுநாயகமாக இருந்து அருள் ஆட்சி புரியும் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கும் விநாயகர், ஷண்முகன், மயூரம், பலிபீடம், மகாலக்ஷ்மி, நவக்கிரகம் ஸ்தூபிகள், ராஜகோபுரங்கள், வைரவர், ஆலடி வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் சோபகிருது வருடம் ஆனி மாதம் 22ம் நாள் 07.07.2023 வெள்ளிக்கிழமை சதய நட்சத்திரமும் சதுர்த்தி திதியும், சித்த யோகமும் கூடிய காலை 08.55 மணிமுதல் மு.ப. 10.15 மணி வரையுள்ள சிம்மலக்கின சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் (குடமுழுக்கு) நிகழ எம்பெருமான் அருள்பாலித்துள்ளார். அடியார்கள் அன்றும் அதற்கு முன்பின் நடைபெறும் கிரியைகளைத் திரிசித்து முருகன் அருள்பெற்று வாழ்வாங்கு வாழ்வீர்களாக.

## கிரியாகால விபரம்

சர்வ மங்கள சோபகிருது வருடம் ஆனி மாதம் 19ம் நாள் (04.07.2023) செவ்வாய்க்கிழமை அதிகாலை 05.00 மணி முதல் சந்திர கோரையில் கர்மாரம்பம், தொடர்ந்து அனுக்ஞை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், சமிதா ஹோமம், மூர்த்தி ஹோமம், திசா ஹோமம், ரக்ஷரக்ஷோக்னஹோமம், சாந்தி ஹோமம், புதிய சுவாமிகள் அதிவாசக்கிரிகைகள். மாலை 05.00 மணிமுதல் கிராம சாந்தி, பிரவேசபலி, வாஸ்து சாந்தி, கோ பூஜை, கோ வாசம், திருவருள் பிரசாதம் வழங்கல்.

ஆனி மாதம் 20ம் நாள் (05.07.2023) புதன்கிழமை காலை 08.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, கங்கா தீர்த்தம், சங்கிரகணம், சூர்யா அக்னி சங்கிரகணம், தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், மிருத்சங்கிரகணம். மாலை 04.30 மணிமுதல் விநாயகர் வழிபாடு, அங்குரார்ப்பணம், கலாகர்ஷணம், ரக்ஷாபந்தனம், தர்மத்துவஜபூஜை, கடஸ்தாபனம், கலாகர்ஷணம், யாகபூஜை, ஹோமங்கள், சர்வாஞ்சலி, தீபாராதனை, திருவருள் பிரசாதம் வழங்கல். முன்னிரவு 09.45 மணி முதல் மு.ப.11.00 மணிவரையுள்ள கும்பலக்கின சுபவேளையில் யந்திர ஸ்தாபனம், விம்பஸ்தாபனம்.

ஆனிமாதம் 21ம் நாள் (06.07.2023) வியாழக்கிழமை காலை 09.00 மணிக்கு விநாயக வழிபாடு, விஷேடசந்தி, யாகபூஜை, விஷேட திரவியஹோமம், தைலாப்பியங்கம், பூர்ணாகுதி, தீபாராதனை, சர்வாஞ்சலி முதலியன நடைபெற்று பிரசாதம் வழங்கல். காலை 09.30 மணிமுதல் மாலை 05.30 மணி வரை அடியார்கள் எண்ணெய்காப்பு சாத்துதல்.

மாலை 05.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, சிவோகம் பாவனை, பிம்பசுத்தி, பிம்ப ரக்ஷாந்தனம், சகல சடத்துவ நியாசம், யாகபூஜை, ஹோமம், நாடி சந்தானம், ஸ்பர்சாகுதி, விஷேட பூஜை, வேத தோத்திர திருமுறை பாராயணம், திருவருள் பிரசாதம் வழங்கல்.

ஆனிமாதம் 22ம் நாள் (07.07.2023) வெள்ளிக்கிழமை அதிகாலை 6.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு, யாகசாலைப்பிரவேசம், யாகபூஜை, பரிவார வேதா பூர்ணாகுதி, பிரதான யாகசூல மஹாபூர்ணாகுதி, விசேட தீபாராதனை, மந்திர புஷ்பம், பிரதஷண நமஸ்காரம், வேதபாராயணம், திருமுறை பாராயணம், மகா ஆசீர்வாதம், நாத கீத நாட்டியாஞ்சலி சமர்ப்பணம், மங்கலாச்சரணம், அந்தர் பலி, பகிர்பலி, கும்பங்கள், வேததிருமுறை, மங்களவாத்தியம் முழங்க கொடி, குடை, ஆலவட்டம், கவரி வீச மஹா ராஜா வீதியில் வலம் வருதல், காலை 08.55 - மு.ப. 10.15 மணி வரையுள்ள சிம்மலக்கின சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து தசமங்கள தரிசனம், கோபூஜை, திருக்கதவம் திறத்தல் நடைபெற்று ஆசியுரை, மஹாபிரசாதம் வழங்கல், தொடர்ந்து மஹாஅபிஷேகம், மகேஸ்வரப் பூஜை நடைபெறும். இறுதிநாள் மாலை 06.00 மணிமுதல் விஷேட பூஜை, திருக்கல்யாண உற்சவம் இடம்பெறும்.

## கும்பாபிஷேக குருமார் விபரம்

**சர்வபோதகம்**
முத்தமிழ் குருமணி சகலாகமசங்கிரகர் **சிவஸ்ரீ.நா.சர்வேஸ்வரக்குருக்கள்**
(பிரதமகுரு, கதிரமலை சிவன் திருக்கோயில்)

**ஆலய அர்ச்சககுரு**
வேதாகம உதயசூரியன் வேதகானப்பிரியன்
**சிவஸ்ரீ.ஆதிசுந்தரராஜக்குருக்கள்**

**கும்பாபிஷேக முகூர்த்த நிர்ணயம்**
**டாக்டர் சிவஸ்ரீ. விஸ்வநாத ரங்கநாதக்குருக்கள்**
கனடா

சிவாகம ஞானபாஸ்கரன் **சிவஸ்ரீ.தானு மஹாதேவக்குருக்கள்**
(அதிபர், தர்மசாஸ்தா குருகுலம்)

**நல்லாசி வழங்கும் விப்ர சிரேஷ்டர்கள்**
ஆகமப்பிரவீணா **சிவஸ்ரீ.கைலை வாமதேவக்குருக்கள்**
(ஆதீனகுரு, நயினை நாகபூசணி அம்பாள் திருக்கோயில்)

தேவீ பூஜா துரந்தர் **சிவஸ்ரீ.பத்மநாபக்குருக்கள்**
(ஆதீனகுரு தர்மகர்த்தா, முன்னேஸ்வரம், திருக்கோயில், சிலாபம்)

**ஸ்தானிய குரு** (திருமுறை பாராயணம்)
**அருள்தாஸ் சுவாமிகள்**
(திருக்கேதீஸ்வரம்)

**பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார்**
பிரதிஷ்டா பிரகீர்த்தி **சிவஸ்ரீ.வரத உமாசுதக்குருக்கள்**
(பிரதமகுரு, மயிலணி முருகன் திருக்கோயில், சுன்னாகம்)

**சர்வசாதகம்**
சர்வசாதகதிலகம் **பிரம்மஸ்ரீ.ப.ராஜகோபால சர்மா**
(நீராவியடி, யாழ்ப்பாணம்)

**கலந்து சிறப்பிக்கும் சிவாச்சாரியார்கள்**
சிவஸ்ரீ.ச.சந்தனக்குருக்கள்
சிவஸ்ரீ.ச.ஸ்ரீகாந்தரக்குருக்கள்
சிவஸ்ரீ.க.சுதாகரக்குருக்கள்
சிவஸ்ரீ.சோ.சுதர்சனக்குருக்கள்
சிவஸ்ரீ.க.துராகசக்குருக்கள்
சிவஸ்ரீ.சிவ.கிருஷ்ணாக்குருக்கள்
சிவஸ்ரீ.ச.கணேசநாதக்குருக்கள்
சிவஸ்ரீ.வா.வித்தியாதரக்குருக்கள்
சிவஸ்ரீ.வ.கேதீஸ்வரக்குருக்கள்
சிவஸ்ரீ.உ.அபராஜிதக்குருக்கள்
சிவஸ்ரீ.குகட்னசக்குருக்கள்

**ஏனைய சாதகர்கள்**
**சிவஸ்ரீ.லஷ்மிகாந்தஜெகதீஸ்வரக்குருக்கள்** (கொழும்பு)
**பிரம்மஸ்ரீ சு.கவிஷான்சர்மா** (புத்தளம்)
**பிரம்மஸ்ரீ கு.ஷண்மதுரசர்மா** (பறாளாய்)

**வேத பாராயணம்**
**பிரம்மஸ்ரீ உ.பக்தவக்ஷல சர்மா** (மயிலணி)
**பிரம்மஸ்ரீ ஆ.ஸ்ரீகாந்தன் சர்மா** (தெல்லிப்பளை)

**யாக சம்ரட்சகர்கள்**
பிரம்மஸ்ரீ ல.சிந்துஜசர்மா
பிரம்மஸ்ரீ ஸ்ரீ.அம்பிகநாதசர்மா
பிரம்மஸ்ரீ ந.யசோதரசர்மா
பிரம்மஸ்ரீ கு.லலிதன் சர்மா
பிரம்மஸ்ரீ சோ.யாதவசர்மா
பிரம்மஸ்ரீ மா.சுபாகரசர்மா

*மங்கள வாத்தியம்*
ஈழநல்லூர் புகழ்
**ராஜன் குழுவினர்**

*சிறப்பு மங்கள வாத்தியம்*
ஈழநல்லூர் புகழ்
**பிச்சையப்பா ரஜிந்திரன் குழுவினர்**

*ஸ்தபதியார்*
சிற்பகசிந்தாமணி அராலியூர்
**நவரட்ணம் கங்கைரூபன்**

*ஒலி, ஒளி அமைப்பு*
**தீபன் சவுண்ட்**
திருநெல்வேலி

*பூமாலை அலங்காரம்*
**சரவணன் ஐயா**

அடியவர்கள் கும்பாபிஷேகத்தையும் முன், பின் நடைபெறும் கிரியைகளையும் தரிசிப்பதோடு தாங்களால் இயன்ற பொருளுதவி சரீர உதவிகள் செய்து சிவத் திரவியங்களான பால், தயிர், இளநீர், நெய், தேன், கற்பூரம், சாம்பிராணி, மாலைகள், பூக்கள் முதலியவற்றை உபகரித்து திருவருள் பேறுகள் பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாக.

**மண்டலாபிஷேகம் தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும்.**

**"தினையளவு கேட்டால் மலையளவு கொடுப்பான் சிறுப்புல கந்தன்"**

பொது முகாமையாளர்
இராமச்சந்திரன் வினோதராஜ்
0743269276
0779025712

தெய்வீகத் திருப்பணியில்
தர்மகர்த்தா
லாவண்யா சஞ்சீவன் இராஜகோபால்
(நவரட்ணராஜா விதானையார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு
15 - 09 - 1945



இறப்பு
04 - 07 - 2022

## திருமதி எட்வேட் செல்வராணி

அன்பால் அரவணைத்து
ஆண்டு பல எமைக் காத்து
அழகாய் வாழ வைத்த உறவே....

ஆயிரம் உறவிருந்தும்
அவனியிலே உங்கள் பாசத்துக்கு
இணையாய் எதை சொல்வோமோ?
மண்ணுலகில் என்ன குறை கண்டீரோ...?
ஏன் விண்ணுலகு காண எண்ணினையோ....?
ஓர் ஆண்டு ஓடி ஒழிந்தாலும்
நித்தம் உங்கள் நினைவுகளுடன்
ஆசையாய் காத்திருக்கிறோம்
உங்கள் உறவுக்காய்....
மீண்டு வாரும் அன்னையே....


215/16, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்..
குடும்பத்தினர்.

(CS/51093)AH-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 12 . 1945



மறைவு
01 . 07 . 2023

## இராசதுரை அருளானந்தம்

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், தாவடி தெற்கு, பத்தானை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை அருளானந்தம் கடந்த (01.07.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை - மனோன்மணி தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற அப்பாக்குட்டி மற்றும் நாகம்மாள் தம்பதிகளின் அன்பு மருமகனும், தங்கமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், சந்திரசேகரம், குமாரகுலசிங்கம், பரமானந்தம் மற்றும் புஸ்பலீலா, மாங்கலேசுவரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அமிர்தராஜ் மற்றும் அருள்குமரன், வசீகரன், அரவிந்தன், அஜந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அனித்தா, டனுஜா, தமிழினி, சர்மிளா ஆகியோரின் அன்பு மாமனாரும், சபியா, மெர்சியா, ஆத்வி, மகிசா, ருத்விகா ஆகியோரின் அன்புப் பேரனும், புஸ்பரத்தினம், சண்முகலிங்கம், காலஞ்சென்ற அன்னலிங்கம், மனோன்மணி, விசாலாட்சி, சிவபாக்கியலட்சுமி, வரதலீலா, பவானி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS/51119)AH-1


தகவல்: குடும்பத்தினர்.

077 652 3229 - காந்தன்

# மரண அறிவித்தல்

## திரு. தம்பிமுத்து மணிவண்ணன் (ராசன்)

### (மயிலிட்டி மண்ணின் வரலாற்றுப் பொக்கிசம், பெரும் மதிப்புக்குரிய தலைவர் திருப்பூர் ஒன்றியம் – மயிலிட்டி– பிரான்ஸ் கிளை)



அன்னை மடியில்
17.08.1968

பேச்சியம்மன் பாதத்தில்
20.06.2023

யாழ்.மயிலிட்டி, திருப்பூரைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Drancy ஐ வதிவிடமாகவும் கொண்ட திரு. தம்பிமுத்து மணிவண்ணன் (ராசன்) கடந்த (20.06.2023) செவ்வாய்க்கிழமை சுகயீனம் காரணமாக பிரான்ஸில் காலமானார்.

அன்னார் தம்பிமுத்து - இராஜேஸ்வரி (குட்டி) தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் மங்களநாயகி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், வாசுகியின் பாசமிகு கணவரும், நிஷோக், திரிஷிகா ஆகியோரின் பாசமிகு அன்புத் தந்தையும், தர்ஷிகாவின் அன்பு மாமனாரும், ஹேஷராவின் அன்பு அப்பப்பாவும், மணிமாறன் (குட்டிப்பழம்), காலஞ்சென்ற மதியழகன் மற்றும் றஞ்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசந்தமேனன், சுவர்ணா (வவி), குணமாலினி, தேவபாலினி, குகாகரன், காலஞ்சென்ற கோமுகி, சசிகரன் (கதிரவன் நகைமாடம் - விசுவமடு), மதுப்பிரியா (பிரான்ஸ்), பக்தவத்சலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஸ்ரீரங்கநாதன், ஜான்சன், பாலினி, சகிலா, செந்தூரன் (பரிதி), லக்ஷனா ஆகியோரின் சகலனும், டிலானி, நிலா, கஜன், யாழருவி, சங்கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், துவாரகன், சிந்துஜன், விதுஷன், டினோஜன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், லிதுஷா, யதுஷா, விதுஷன், காலஞ்சென்ற குஜிநந், சஜானா, சானுகா, வேதாஞ்சன், கேசவ், தசாந் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.15 - 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.30 - 2.45 மணியளவில் ( Funerarium 95 Rue de marcel sembat - 93430 Villetaneuse ) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புனித லூத் நாயகி வீதி,
3ம் கட்டை, ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.


நிஷோக் (மகன்) - +94(77)083 0463
சதீஸ் (சகோதரன்) - +33(0)666 743 559
வசந்தன் ( மச்சான்) - +33(0) 760 289 885

(CS/51053)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 05 . 1945



மறைவு
02 . 07 . 2023

## அந்தோனிப்பிள்ளை மரியதாஸ்

யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் நேற்று முன்தினம் (02.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கபிரியேல்பிள்ளை - திரேசம்மா தம்பதியினரின் மருமகனும், விக்ரோறியா (பத்மா) வின் பாசமிகு கணவரும், அனுஷானந்தன், பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லோறன்ஸ், அகஸ்ரின், காலஞ்சென்றவர்களான வின்சன், சின்னப்பர், கலிஸ்ரா, அக்கினேஸ், அலோசியஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், றீற்றா, மாசில்லாநாயகி, காலஞ்சென்ற ராசக்கோன், மற்றும் மரியசீலி, சந்திரன், அருள்நேசன், காலஞ்சென்றவர்களான மெறானி அத்தில்டா, சுவாமிநாதர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.07.2023) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் இலக்கம் 30, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து இறுதி ஆராதனைக்காக புதுமை மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
077 923 5594 குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 02 . 1940



மறைவு
03 . 07 . 2023

## திருமதி யோகநாதன் இரத்தினபூபதி

தெய்வங்கேணி வீதி, சரசாலை தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மாரீசன்கூடல், இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகநாதன் இரத்தினபூபதி நேற்று (03.07.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற யோகநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தேவராசாவின் அன்புச் சகோதரியும், சற்குணவதியின் அன்புத் தாயாரும், மணிவர்ணனின் மாமியாரும், தர்சிகா - கஜமுகன், மதுஷா ஆகியோரின் பேர்த்தியும், விகாஷனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மாரீசன்கூடல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரீசன்கூடல்,
இளவாலை

தகவல்:
குடும்பத்தினர்

077 955 3768 (CS 25435) AH-1

# பரிசளிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 4
சைவ வித்தியா விருத்திச் சங்கம் நடத்தும் இந்துபோர்ட் சு.இராசரத்தினத்தின் 139ஆவது பிறந்த நாள் நிகழ்வும் மற்றும் பரிசளிப்பும் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு சங்க ஆராதனை மண்டபத்தில் தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் விருந்தினராக சுன்னாகம், வாழ்வகத் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-ரி2)

## Business Place For Rent

இல. 49 1ம் குறுக்குத் தெருவில் உள்ள 1500 சதுர அடிகொண்ட வர்த்தக நிலையத்தின் 1ம் தளம் வாடகைக்கு உண்டு. இது போதனா வைத்தியசாலையிலிருந்து 300m தூரத்திலும், நீதிமன்ற கட்டிடத் தொகுதியிலிருந்து 50m தூரத்திலும் A9 வீதி, பருத்தித்துறை வீதி, KKS வீதி என்பவற்றை இணைக்கும் முக்கிய சந்தியில் வாகன தரிப்பிடத்துடன் அமைந்துள்ளது.

தொடர்புகளுக்கு: 077 728 6003

## மணமகள் தேவை

1981 இல் பிறந்த இந்து கௌரவ குலத்தைச் (V) சேர்ந்த கனடாவில் வசிக்கும் சிங்கராசி மகநட்சத்திரத்தையுடைய மணமகனுக்கு மணமகள் தேவை. (உள்ளூர், வெளியூர் விரும்பத்தக்கது).

தொடர்புகளுக்கு:
077 847 7603

# முல்லைத்தீவு கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம்

Mullaitivu East Palm Resources Development Co-Operative Society [LTD] முல்லைத்தீவு கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் பின்வரும் பதவிகளுக்கு வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பதவி - உற்பத்தி உதவியாளர்**
**சம்பள குறியீடு 326/16**
**சம்பள அளவுத்திட்டம் -**
16975-135×10-150×10-19825

**2. பதவி - கிளைமுகாமையாளர்**
**சம்பள குறியீடு 208/11**
**சம்பள அளவுத்திட்டம் -**
19280-190x10-210x10-23280

- **வயதெல்லையானது 18 - 45 வயதாகும்.**

பொதுவானது கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 02/2022 சுற்று நிருபங்களுக்கு அமைவாக மாதாந்தம் இலாபத்தில் வாழ்க்கை செலவுப்படி 7800/= செயலாற்றுகை கொடுப்பனவு 1000/= பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான தகைமைகளினை வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் இணையத்தள முகவரி www.np.gov.lk இன் சுற்று நிருபங்கள் பகுதியில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் கீழ் (http://np.gov.lk/cooperative-employees-commission-circulars-2021 என்ற இணைப்பில்) பார்வையிட்டு கொள்ள முடியும். அல்லது உரிய சங்கத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவத்தினை பெற்று முழுமையாக பூரணப்படுத்தி **தலைவர் முல்லைத்தீவு கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கரைச்சிக் குடியிருப்பு முல்லைத்தீவு** என்னும் முகவரிக்கு **2023.07.20ம்** திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு **தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.**

**மேலதிக தொடர்புகளுக்கு - 021 229 0296**

**தலைவர்**
**முல்லைத்தீவு கிழக்கு பனை தென்னை வள**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.** (CR/40272)AH-1

யாழ். தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, பரந்தன், யாழ்ப்பாணம், கன்னாதிட்டி வீதி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த

## கிருஸ்ணர் இராஜரட்ணம்

**(ஓய்வுபெற்ற பொறியியலாளர் – பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)**
**அவர்களின்**

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திதி:- 04.07.2023

மண்ணில்
18 . 05 . 1927



விண்ணில்
06 . 07 . 2020

**அன்புத் தந்தையே**
தங்களுக்கு எமது மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிகள்
இதயம் கனக்கும் நினைவுகள் ஏராளம்
இன்னமும் எங்களோடு
ஆயினும் துவண்டு போவதில்லை
காரணம் தளர்வறியா உங்கள் உறுதியும்
கூடவே ஆதலால்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தங்களின் ஆத்ம சாந்தி வேண்டி எல்லாம் வல்ல இறைவனை வழிபடும்
**அன்பு மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்**
(CS/51116)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## கிருபாமூர்த்தி சிந்துஜன்



அன்னை மடியில் 20.02.1988

கந்தன் அடியில் 26.06.2021

வேரோடி விழுது விட்டு
பேரோடு வாழ்வாயென நாமிருக்க
பாரோடு எமைவிட்டுப் பாதியிலே - நீ சென்று
ஈராண்டு அகன்றதையா!

அரும்பணியாற்றிய பண்பின் உறைவிடமே!
அன்பால் அரவணைக்கும் பாசத்தின் ஒளிவிளக்கே!
மீளாத்துயில் கொண்டு நீ - எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றாயே!

நிலையான நின் நினைவுகளுடன்
நிதமும் அரனடி வேண்டி
திருவருளால் நின் ஆன்மா சாந்திபெற
சிரம் தாழ்த்தி வேண்டுகின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

"அக்கா அகம்"
சிந்துஜன் ஒழுங்கை, கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

கண் மகிழ 26.01.1967



மண் நெகிழ 05.06.2023

## நாகமுத்து குகதாசன்


கடந்த (05.06.2023) அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் மரணச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி, குறுஞ்செய்தி (SMS) வாயிலாகவும் மற்றும் உணவு, சிற்றுண்டிகள் வழங்கியும், எம்முடன் துயர் பகிர்ந்து ஆறுதல் அளித்த அனைத்து உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (05.07.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 29.12.1977



இறப்பு 03.07.2023

## திரு. கனகபவன் வித்தியாஷங்கர்

(Promotion Officer Development Lotteries Board)

யாழ்.கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், உடுவில் மற்றும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகபவன் வித்தியாஷங்கர் நேற்று (03.07.2023) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகபவன் மற்றும் வரதட்சாயினி (உடுவில் மான்ஸ் ஆரம்ப பாடசாலை ஓய்வு பெற்ற ஆசிரியர்) தம்பதியரின் அன்பான ஏக புதல்வனும், காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் தேவபுஷ்பம் (ஓய்வுபெற்ற அதிபர், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, ஓய்வு பெற்ற அதிபர் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை) ஆகியோரின் அன்பு மருமகனும், கிறிஸ்மி சுஜீவா (முன்னாள் ஆசிரியை - பரி. தோமா, கனிஷ்ட பாடசாலை, கொழும்பு மற்றும் உப அதிபர் - உடுவில் மகளிர் கல்லூரி) அவர்களின் பாசமிகு கணவரும், சாமுவேல் வர்ஷன் (பரி. யோவான் கல்லூரி), ஷெமுவல் அருஷன் (பரி. யோவான் கல்லூரி), ஷெமிடா ஷியாரா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (04.07.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வைற் ஹவுஸ் ( White House ) இல் நடைபெற்று நல்லடக்கம் பரியோவன் ஆலய சேமக்காலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 224 4607

தகவல் : மனைவி
சுஜீவா வித்தியாஷங்கர்.

# மின்கம்பத்துடன் மோதி 'கப்' வாகனம் விபத்து

யாழ். - கண்டி பிரதான வீதியில் புதுக்காட்டுச் சந்திக்கு அண்மையாக யாழ்ப்பாணம் நோக்கி விற்பனைப் பொருள்களுடன் பயணித்துக் கொண்டிருந்த சிறிய 'கப்' ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் மறுபக்கத் திலிருந்த மின்கம்பத்துடன் மோதி விபத்துக் குள்ளாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

விபத்தில் வாகனச் சாரதி படுகாயமடைந்துள்ளார். அவர் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஒ,27)

# வங்கிக்கணக்குகள் எவையும் பாதிப்புறாது!

## பிரதமர் உறுதியளிப்பு



**கொழும்பு, ஜூலை 4**

**நாட்டிலுள்ள 22 மில்லியன் மக்களுக்கு 57 மில்லியன் வங்கிக் கணக்குகள் காணப்படுகின்றன. கடன் மறுசீரமைப்பின்மூலம் அனைத்து வங்கிக்கணக்குகளுக்குமான நம்பிக்கையை நாம் ஏற் படுத்தியுள்ளோம். அதனால் வங்கி வாடிக்கையாளர்கள் எவரும் சந்தேகப்படத் தேவையில்லை என்று பிரதமர் தினேஷ் குணவர்த் தன தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை அவர் மேலும் தெரி வித்ததாவது:-

எதிர்க்கட்சிகள் 57 மில்லியன் வங்கி வாடிக்கையாளர்களை அச்சத்துக் குள்ளாக்கினார்கள். வங்கிகளை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வருவதற்கான செயற்பாடுகளை யும் முன்னெடுத்தனர். அதுவும் கைகூடவில்லை. ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்கள் மற்றும் வர்த் தக சமூகத்தைத் திசை திருப்பும் அவர்களது திட்டமும் பயனளிக்க வில்லை-என்றார். (அ-ஒ,இ)

## பயணிகள் கப்பல்சேவை ஆரம்பிப்பது தாமதமாகும்

### இந்திய ஊடகம் தகவல்

கொழும்பு, ஜூலை 4

இலங்கை - இந்தியா இடையிலான பயணி கள் கப்பல்சேவை ஆரம்பிக்கப்படுவது தாம தமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதுச்சேரியின் காரைக்காலுக்கும், யாழ்ப்பா ணம், காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல்சேவை கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் கப்பல் சேவைக்காகத் தெரிவு செய்யப்பட்ட துறைமுகம் மாற்றப்பட்டதால் இந்தப் பயணிகள் கப்பல்சேவை ஆரம்பிக் கப்படுவது தாமதிக்கப்பட்டு வருகின்றது என்று கூறப்படுகின்றது.

தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள நாகப் பட்டினம் துறைமுகத்தின் வசதிகளை மேம் படுத்த இந்தியா அவகாசம் கோரியுள்ளது என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில் வாவை மேற்கோள்காட்டி இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஏ-இ)

# அப்பாவி மக்களின் மீதே சுமை ஏற்றப்பட்டுள்ளது

## கடன்மறுசீரமைப்புத் தொடர்பில் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

ஓய்வூதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றின்மீது சுமையை ஏற்படுத்தியே அரசாங்கம் கடன் மறுசீ ரமைப்பை மேற்கொள்ள முயற்சிக் கிறது. நாட்டை வங்குரோத்து அடையச் செய்தவர்களே தற்போது நாட்டைக்



கட்டியெழுப்புவதாகத் தெரிவித்து வரு கின்றனர், இது சாத்தியமில்லை. அத னால் அரசாங்கம் ஏதாவது ஒரு தேர்த லுக்குச் சென்று மக்கள் ஆணையை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று எதிர்க்கட்சிப் பிரதம கொறடா லக் ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டை ஆட்சி செய்துவந்த அரசாங் கங்கள் 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்றிருக்கின்றன.

ஆனால், நாடாளுமன்ற விவாதம் நடத் தியதில்லை. ஏனெனில் அது அரசாங் கத்தின் கொள்கை. அரசாங்கத்தின் கொள்கையை நாடாளுமன்றத்தில் அனுமதிக்கத் தேவையில்லை. அத னால் தற்போது அரசாங்கம் இதனைச் சமர்ப்பித்து நாடகத்தை அரங்கேற்றி வருகிறது.

கடன் மறுசீரமைப்புச் செய்யும்போது அது பொருளாதாரத்துக்கு சுமையை ஏற்படுத்துகிறது. அந்தச் சுமை பகிர்ந் தளிக்கப்படவேண்டும் என்றே நாங்கள் தெரிவிக்கிறோம். ஆனால், அரசாங்கம் இந்தச் சுமையை ஓய்வூதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதி அப்பாவி மக் கள் மீது சுமத்தியிருக்கின்றது - என் றார். (அ-ஒ,இ)


**Green Life RealEstate**

* இலங்கையின் எப்பாகத்திலும் காணி, வீடு விற்க வாங்க தொடர்பு கொள்ளவும்.
* எம்மிடம் இலங்கையின் பலபாகங்களிலும் காணி, வீடு கடைகள் விற்பனைக்கு உண்டு.

G.P.S. வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

T.P: 077 555 9028

EC 25451A-1

**தேவை**

தோட்ட வேலை தெரிந்த தங்கிநின்று வேலை செய்யக்கூடிய 50 வயதுக்கு மேற்பட்டவர் தேவை.
சம்பளம் நேரில்.
தொடர்பு:- 077 977 3286

**முகாமையாளர் தேவை**

**திருகோணமலையில் இயங்கும் நிறுவனத்துக்கு முகாமையாளர் தேவை.**
**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**
**தகுதியானவர்கள் சுயவிவரக் கோவையை coljoujob@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.**


## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 . 06 . 1944 | 03 . 07 . 2023 |



**விசுவலிங்கம் மகாலிங்கம் (சின்னத்தம்பி)**

அளவெட்டி வடக்கு செட்டிச்சோலையை பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட விசுவலிங்கம் மகாலிங்கம் (சின்னத்தம்பி) அவர்கள் நேற்று (03.07.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தர்மேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கஜேந்திரன் மற்றும் சுரேந்திரன், கஜானந்தி (கொழும்பு), ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனுசா (லண்டன்), கலைவாணி, சுமன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம்சென்ற கனகரத்தினம் மற்றும் செல்லம்மா, அம்பலவாணர், தவமணி, மகாலட்சுமி ஆகி யோரின் அன்புச் சகோதரரும், கிருத்தனா, சயந்தனா, டிலக்சன், டிசாந்தன் (கொழும்பு), சஞ்சுதன், கேசவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2023) செவ்வாய் கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தல் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்மளை வைரவர் அடைப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செட்டிச்சோலை, அளவெட்டி வடக்கு.**
**0772741622**
(CR 40278) A-1

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 08 . 02 . 1942 | 01 . 07 . 2023 |



**திருமதி நடராஜா நாகேஸ்வரி**

கொக்குவில் பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா நாகேஸ்வரி கடந்த (01.07.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நரசிங்கம் - ராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை - சோதிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நடராஜா (செல்லக்கிளி - இராசாவின் தோட்டம்) அவர்களின் அன்பு மனைவியும், மஞ்சுளா (கனடா), சுரேஷ்குமார் (கனடா), சியாமளா (கனடா), ஆனந்தகுமார் (கனடா), பிறேமளா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வரத்தினம் அவர்களின் மைத்துனியும், தயாளகாந்தன் (கனடா), ஆனந்தி (கனடா), விமலதாஸ் (கனடா), யாமினி (கனடா), மோகனதாஸ் (லண்டன்) ஆகியோரின் மாமியும், ஆரணி, தக்ஷா, மாதேஷ், அஸ்வினி, வர்ஷினி, சேயோன், நிலாந்தினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2023) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**105, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**

**074 222 4950**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஜித்துக்கு...

அம்பாந்தோட்டையில் நேற்று இடம்பெற்ற நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறினார். இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

நாட்டில் நிதி உறுதிப்பாட்டை உருவாக்குவதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இந்நாட்டின் வங்கிகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றின் மீது கைவைக்காமல் மேற்படி நகர்வை முன்னெடுக்குமாறு எனது ஆலோசகருக்கும் மத்திய வங்கி ஆளுநருக்கும் அறிவுறுத்தினேன். இதன் ஒரு கட்டமாகவே உள்ளூர்க் கடன் சீராக்கல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

**ஈ.பி.எப். இல் கைவைக்கவில்ல**

முதலாவதாக ஊழியர் சேமலாப நிதியத்தின் மீது கைவைக்கவேண்டாம் என்கிறார்கள். நாம் அதன் மீது கைவைக்கவில்லை. மேலும் நான் ஜனாதிபதியாவதற்கு முன்பாகவே அதற்கான வட்டி வீதம் 10% 9% ஆகக் குறைவடைந்திருந்தது. அதேபோல் குறைந்தபட்சம் 9% சதவீத வட்டி வழங்கப்பட வேண்டும் என்பதை அமைச்சரவையே தீர்மானித்திருந்தது. நல்லதொரு மேம்பாடு வருகின்றபோது 10% சதவீத வட்டியை நாம் அறிவிப்போம். ஊழியர் சேமலாபத்தில் நாம் கைவைக்கவில்லை என்பதோடு 9% வட்டி என்பது சட்டத்தின் ஊடாகவே உறுதிப்பட்டுள்ளது. அடுத்ததாக கடன்களுக்கு 24% சதவீத வட்டி அறவிடப்படுவதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. ஆனால், அந்த வட்டி எதிர்வரும் நாள்களில் குறைவடையும். பணவீக்கம் 9% க்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதும் வட்டி வீதம் 12% 13% ஆகவே காணப்பட்டது. இந்த நேரத்தில் வரி விதிக்க வேண்டிய விதம் பற்றி எதிர்க்கட்சி கூறுமெனில் அதுபற்றி அமைச்சரவையில் ஆலோசிக்க நாம் தயாராகவே உள்ளோம்.

மூன்றாவதாக வங்கிகளுக்கு வரி அதிகரிக்கப்படவில்லை என்றும் கூறுகின்றனர். இருப்பினும் எம்மால் வங்கிகளிடத்தில் அதிகளவில் வரியை அறவிட முடியும். ஆனால், அப்போதைய வட்டி வீதம் 12% காணப்பட்டாலும் 13% 14% வரையான வட்டியை அறவிட வேண்டிய நிலைமைக்கு வங்கிகள் தள்ளப்படும். அவ்வாறு வட்டியை அதிகரிக்க இடமளிக்க முடியாது என்பதால் மேற்படி மூன்று யோசனைகளையும் நான் நிராகரித்துவிட்டேன்.

**சஜித்துக்கு அழைப்பு**

தொடர்ச்சியாக போலியான பரப்புரைகளை முன்னெடுப்பதற்கு மாறாக அரசாங்கத்தால் நாட்டின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுடன் இணைந்துக்கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான முழு எதிர்க்கட்சிக்கும் அழைப்பு விடுக்கிறேன். அவ்வாறு ஒன்றுபடும் பட்சத்தில் நாட்டை முன்னேற்றும் வேலைத்திட்டத்துக்கு பங்களிப்புச் செய்த பெருமிதத்துடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டும்.

ஆளும் தரப்பில் இருந்தாலும் எதிர்த் தரப்பில் இருந்தாலும் நாட்டின் அபிவிருத்திக்காகவும் நாட்டு மக்களுக்குச் சலுகைகளை பெற்றுக்கொடுப்பதற்காகவும் ஒன்றுபட்டுச் செயற்படுவோம். அதனை விடுத்து போலியான தர்க்கங்களை முன்வைப்பதால் பயனில்லை. அந்த முயற்சியில் எதிர்க்கட்சி பல தடவைகள் தோற்றுப்போயுள்ளது.

சபாநாயகருடன் கலந்துரையாடி எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மேலும் பல பொறுப்புகளைக் கையளிக்க நான் தயாராகவே உள்ளேன். தற்போதும் அவர்கள் செயற்குழுக்களில் அங்கத்துவம் வகிக்கின்றனர். எதிர்வரும் நாட்களில் வரவு - செலவுத்திட்ட அலுவலகம் திறக்கப்படவுள்ளதால் மேலும் பல பொறுப்புகள் உருவாகும். அதனால் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வாருங்கள். எதிர்க்கட்சி அந்தஸ்துக்கு பாதிப்பு ஏற்பட நாம் இடமளியோம் - என்றார். (அ-ஒ.இ)

## இளைஞனின்...

எடுத்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

காதலியுடன் ஏற்பட்ட தர்க்கத்தையடுத்து அவர் இந்த முடிவை எடுத்துள்ளதாக விசாரணைகளின்போது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ.26,125)

## மதில்...

என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

முல்லைத்தீவு- சிலாவத்துறையிலுள்ள உறவினர்களின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் குடும்பத்தினர் சென்றுள்ளனர். தூண் போடப்படாத பழைய மதில் அருகில் குழந்தை தந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்துள்ளது. அதன் மறுபக்கத்தில் நின்றிருந்த உறவினர் ஒருவர் குழந்தையை மதில் மேலாகத் தூக்குவதற்காக, மதிலில் ஒரு காலை ஊன்றியுள்ளார். அப்போது மதில் சரிந்து குழந்தை மீது வீழ்ந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்ட குழந்தை மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளது.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ.26)

## தையிட்டி...

ஒப்படைக்க வேண்டுமென வலியுறுத்தியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஆரம்பிக்கப்பட்ட நான்காம் கட்ட கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுத் திங்கட்கிழமை மாலையுடன் நிறைவுக்கு வந்துள்ளது.

நேற்றைய போயா தினத்தை முன்னிட்டு விகாரையில் விசேட வழிபாடுகள் இடம்பெற்ற நிலையிலேயே இரண்டாவது நாளாகவும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

விகாரை அமைந்துள்ள வீதியின் முகப்புக்கு வெளியே தனியார் காணியில் நேற்றுமுன்தினம் தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இரண்டாவது நாளாக நேற்றுத் திங்கட்கிழமை காலை முதல் போராட்டம் தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட நிலையில் விகாரைக்குச் செல்லும் அதே வீதியின் வலது பக்கத்தால் இராணுவ வாகனங்கள் செல்வதை அவதானித்த போராட்டக்காரர்களின் ஒருபகுதியினர் மு.ப. 10.30 மணியளவில் திடீரென அங்கிருந்து பேரணியாகச் சென்று வீதியோரமாகப் புதிதாகப் போராட்டக் களத்தை ஆரம்பித்திருந்தனர்.

அங்கு விரைந்து சென்ற பலாலிப் பொலிஸார் போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட நிலையில் போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்குமிடையில் கடும் வாக்கு வாதமும் ஏற்பட்டிருந்தது. (அ-ஒ.66)

## வெடுக்குநாறிமலை...

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அந்தக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்து - பௌத்த சங்கம் என்ற பெயரில் அண்மைக்காலமாக ஆலயங்களின் திருவிழாக்களில் நிர்வாகத்தினரின் அனுமதியின்றி பதாகை கட்டப்பட்டு வருகின்றது. இந்து - பௌத்த சங்கம் என்று இயங்கும் அமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியைப் பின்புலமாகக் கொண்டது. குருமன்காடு பிள்ளையார் ஆலயத்தின் முன்னால் இருந்த தாகசாந்தி நிலையத்தில்கூட இந்த அமைப்பு தனது பதாகையைப் போட்டிருந்தது.

'இந்து - பௌத்த சங்கம் என்கின்ற அமைப்பு ஆலயங்களில் இந்தப் பதாகைகளைத் தொங்க விடுவது பௌத்தமயமாக்கலை ஏற்படுத்துவதற்காகவும், மதங்களுக்கு இடையில் பிரச்சினையை ஏற்படுத்தவும்' என்ற அடிப்படையில் எனது முகப்புத்தகத்தில் பதிவேற்றியிருந்தேன். அதற்காக இந்த அமைப்பு சார்ந்து இயங்கும் சில நபர்கள் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்ததற்கு அமைவாக நான் வாக்குமூலம் வழங்கினேன்.

தமிழர் தாயகத்தில் பௌத்தமயமாக்கலை மேற்கொள்வதற்காகத் திட்டமிட்டு இயங்கும் அமைப்பாக இவர்களைக் குற்றம்சாட்டுகின்றோம். வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தினுடைய விக்கிரக உடைப்புக்கும் இந்த அமைப்புக்கும் நேரடியாகச் சம்பந்தம் இருப்பதாக நாம் குற்றம் சாட்டுகின்றோம்.

இந்த அமைப்பினுடைய செயற்பாடுகள் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் பௌத்தமயமாக்கலை தமிழர் தாயகத்தில் செய்வதுதான். சைவ ஆலயத்தில் பௌத்த மதத்தை சேர்க்கவேண்டிய தேவை என்ன? - என்று கேள்வி எழுப்பினார். (அ-ஒ.18)

## முல்லைத்தீவில்...

சர்ச்சைக்குரிய குருந்தூர்மலை விகாரைக்கும் நேற்றுமுன்தினம் சென்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பயணம் மேற்கொண்ட சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவால் மாவட்டச் செயலகத்தில் சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளதுடன் கொக்கிளாய் பகுதியில் அத்துமீறி குடியேறியுள்ள சிங்கள மக்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை - நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர, வட்டுவாகலிலுள்ள கோத்தாபய கடற்படைத்தளத்தில் தங்கி கொக்கிளாயிலுள்ள சம்போதி விகாரைக்குப் பயணம் மேற்கொண்டு, பார்வையிட்டு பிக்குகளுடனும், சிங்கள மக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநராக இருந்த அநுராதா யஹம்பத் குருந்தூர் மலைக்குச் சென்று அங்கு வழிபாடுகளை மேற்கொண்டுள்ளார்.

திடீரென சிங்கள - பௌத்த கடும்போக்குவாதிகள் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு படையெடுத்துள்ளமை அங்குள்ள மக்களிடையே பதற்றத்தை தோற்றுவித்துள்ளது. (அ-ஒ.19)

## தமிழ்...

என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வு தொடர்பில் வெளிநாடுகளில் கருத்து வெளியிட்டிருந்த நிலையில் அடுத்த கட்டப் பேச்சு எப்போது நடைபெறும் என கொழும்புச் செய்தியாளர் ஒருவர் ஜனாதிபதியிடம் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

'பேச்சு விரைவில் நடக்கும். அது தொடர்பில் சந்தேகப்படத்தேவையில்லை. அரசியல் தீர்வில் உறுதியாக இருக்கின்றேன். வெளிநாடு சென்றமையால் திட்டமிட்டவாறு பேச்சு நடக்கவில்லை. சர்வதேச சமூகத்திடம் அரசியல் தீர்வு தொடர்பில் கருத்துரைத்துள்ளேன். எனவே அதைச் செயற்படுத்துவேன்' என்று ரணில் குறிப்பிட்டார்.

இதேவேளை - அரசுடனான பேச்சுத் தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனைக் கேட்டபோது; ஜனாதிபதி ரணில் கூறிய திகதியில் பேச்சு நடக்கவில்லை. அடுத்த கட்டப் பேச்சு சம்பந்தமாக அறிவிக்கப்படவில்லை. தொடர்ந்து இவ்வாறு விட்டுக் கொண்டிருக்கமுடியாது. நாங்கள் தீர்க்கமான முடிவு எடுப்போம் என்று ஜனாதிபதியிடம் நேரடியாக கடைசிச் சந்திப்பில் தெரிவித்துவிட்டேன். விரைவில் ஒரு முடிவு எடுப்போம். ஒருவாரத்தின் பின்னர் என்னைத் தொடர்புகொள்ளுங்கள் என்று பதிலளித்தார். (அ-ஒ.22)

## லிட்ரோ...

கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 3 ஆயிரம் ரூபாவை விடக் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-ஒ.இ)

## கட்டுக்கரைக்குளத்தில்...

பர்ணாந்து (வயது-37) ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இரு மீனவர்களும் படகில் மீன் பிடிக்கச் சென்ற நிலையில், அந்தப் படகில் நீர் நிரம்பியதால் அது திடீரென மூழ்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இந்த நிலையிலே நேற்று சக மீனவர்கள் தேடிய போது ஒருவர் காலையில் சடலமாக மீட்கப்பட்டார். மற்றைய மீனவரை ஏனைய மீனவர்கள் மற்றும் மக்கள் இணைந்து கட்டுக்கரைக் குளத்தில் தேடிய நிலையில் நேற்று முன்னிரவு அவரது சடலமும் மீட்கப்பட்டது.

(அ-ஒ.60,213)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளி. உணவகங்களில் திடீர்ச் சோதனைகள்!

## பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்கள் அழிப்பு

கொழும்பு, ஜூலை 4

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

கிளிநொச்சி பொதுச்சந்தை மற்றும் நகரில் அமைந்துள்ள உணவகங்கள் என்பன திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

கிளிநொச்சி பொதுச் சந்தையின் மாட்டிறைச்சி விற்பனைக் கடையில் அனுமதியின்றி வெட்டப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த சுமார் 50 கிலோ மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதோடு வியாபாரிகளுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

நகரில் ஏ-9 பிரதான வீதி, கனகபுரம் வீதியில் அமைந்துள்ள பல உணவகங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.



சமைத்த உணவுகளுடன் சமைக்காத இறைச்சி உள்ளிட்ட உணவுப்பொருள்கள் ஒரே குளிர்சாதனப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டதை அடுத்து அவை அழிக்கப்பட்டன. பயன்பாட்டுக்கு உதவாத உணவுப் பொருள்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதோடு, உரிமையாளர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

சந்தைக்குள் பழக்கடைகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு அங்கு பழங்களை பழுக்க வைப்பதற்கான இரசாயனப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. இந்தப் பரிசோதனைகள் தொடர்ச்சியாக இடம்பெறும் எனவும் சட்டங்களுக்கு மாறாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்கள் மீது சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-214)

# பழைய வாகனங்களுக்கு சலுகை வழங்கத் திட்டம்

## மோட்டார் போக்குவரத்து ஆணையாளர்

கொழும்பு, ஜூலை 4

பல ஆண்டுகளாக வாகன வருமான வரிப்பத்திரம் பெறாமல், பயன்படுத்தப்படாமல் இருக்கும் பழைய வாகனங்களுக்கு சலுகை அடிப்படையில் வாகன வருமான வரிப்பத்திரம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்தார்.

இதுபோன்ற, வாகனங்களின் மீள் பதிவுக்காக பெருந்தொகை அபராதம் விதிக்கப்படுவதனால், இவை பயன்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக நிஷாந்த அனுருத்த வீரசிங்க சுட்டிக்காட்டினார். எனவே, இதுபோன்ற வாகனங்களின் வாகன வருமான வரிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள சலுகை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-ஒ,இ)


## A/L CHEMISTRY

யாழ்.இந்துக்கல்லூரி, சென்ஜோன்ஸ் அக்கடமி, கொழும்பு இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியர்

D.SIVASOTHY B.Sc, PGDE

பிரபலம்பெற்ற ஆசிரியருடைய வகுப்பு நீண்ட இடைவெளிக்கு பின் மீண்டும் யாழ். மண்ணில் ஆரம்பமாகின்றது.

A/L 2023, A/L Day Batch Paper Class (அலகு ரீதியாக)

2023 - Physical Chemistry
2024 - Organic Chemistry
Inorganic Chemistry
2025 - Chemical Calculation

தொடர்புகளுக்கு: 0773 763511

மாணவர்கள் வசதிக்கு ஏற்ப நேரம் தீர்மானிக்கப்படும். அனுமதிகளை முன்பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும்

BARATHY - சித்தன்கேணி
ஆரம்பம்:- 06-07-2023 - வியாழன் - 3.00 pm

பொருளியற் கல்லூரி - யாழ்ப்பாணம், சுன்னாகம்
இரு இடத்திலும் ஆரம்பம்:- 09-07-2023 ஞாயிற்றுக்கிழமை

## பெண் வேலையாட்கள் தேவை

யாழ். திருநெல்வேலி பகுதியில் தையல் நிலையம் ஒன்றிற்கு அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை.

076 913 2975
075 537 3558

## DHL துரித பொதிகள் சேவை

சகல நாடுகளுக்கும் கடிதங்கள், பொதிகள் 3-5 வேலைநாட்களில் ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna.
T.P: 0777 55 45 28

## பணியாளர்கள் தேவை

யாழ்.K.K.S வீதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு வாடிக்கையாளர் சேவை புரிய பணியாளர்கள் தேவை.

451, K.K.S வீதி
யாழ்ப்பாணம்.
077 009 5246, 075 609 5246

CS/5111 8AH-1

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

T.P: 077 9592 628

(CR 40274)A-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

### நிலப்பரப்பு

- ✔ நவக்கிரி மாணிக்கப் பிள்ளையார் கோயில் வீதியில்.
- ✔ 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✔ 3 வருடம் பூர்த்தி அடைந்த தென்னைகளும் உள்ளன.
- ✔ நிலாவரை வற்றாக் கிணற்றில் இருந்து 1 km தூரம்.
- ✔ நன்னீரூற்றுச் சூழல்
- ✔ 1 பரப்பின் விலை 1200000/= (பன்னிரண்டு இலட்சம்)

பார்வையிடும் நேரம் :-
காலை 6.00 மணி தொடக்கம்
மாலை 6.00 மணிவரை.

தொடர்புகளுக்கு :- ஜெயம்
077 81 47 389
077 98 65 457

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
- நன்னீரூற்று.
- ஒரு பரப்பின் விலை 200,000/= (இரண்டு லட்சம்) மட்டும்.

தொடர்பு: 076 8260 354, 076 0570 354

## சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி

கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனை பொருட்கள், விளையாட்டு பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடல் பட்டின்கள், குடைகள், அழகுசாதன பொருட்கள், மாஸ்க் வகைகள், கவரிங் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள் இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்று கொள்ளலாம்.

உரிமையாளர்:
தே. கலைத்தாசன் (கரன்)
021 3155 900

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (கஸ்தூரியார் வீதி)யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.